மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.396/2015

2025 ம் ஆண்டு நவம்பர் 26 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிச்சாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

26.11.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 4, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 1ம் வாதி எனது தாயார் என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் குமாரசாமி கவுண்டர் என்றால் சரிதான் என் பெற்றோர்களுக்கு நானும், 2 ம் வாதியில் மட்டும் தான் வாரிசுகள் என்றால் சரிதான். என் தாயாரின் சகோதரி பெயர் பெரியம்மாள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு சுமார் 6,7 ஆண்டுகளுக்கு முன்பே எனது தாயாரின் சகோதரி பெரியம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெரியம்மாளின் கணவர் பெரியம்மாள் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் ஆமாம்.

2. மேற்படி பெரியம்மாளின் மகன் தான் இந்த வழக்கில் 8 ம் பிரதிவாதி முருகேசன் என்றால் ஆமாம். என் தாயாரின் சகோதரர்கள் குமாரசாமி கவுண்டர் மற்றும் நாச்சப்ப கவுண்டர் ஆகியோர்கள் என்றால் சரிதான். குமாரசாமி கவுண்டரின் வாரிசுகள் தான் 1 முதல் 4 மற்றும் 9 ம்

பிரதிவாதிகள் என்றால் சரிதான். நாச்சப்ப கவுண்டரின் வாரிசுகள் தான் 5 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் ஆமாம். சாமியாத்தாள், தண்டபாணி சரஸ்வதி மற்றும் 9ம் பிரதிவாதி பழனிச்சாமி கவுண்டர் ஆகியோர்கள் வெளியூரில் வசித்து வருகிறார் என்றால் இல்லை பழனிச்சாமி மட்டும் உள்ளூரில் வசித்து வருகிறார். நான் சொல்வது உண்மை அல்ல என்றும், 9ம் பிரதிவாதி அரவக்குறிச்சி, மொஞ்சனூர் ரெட்டிவலசில் வசித்து வருகிறார் என்றால் ஆமாம்.

3. என் தாயாரின் தகப்பனார் ஆன ராமசாமி கவுண்டர் என்பவர் 1989 ஆம் ஆண்டுக்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது மனைவி பெயர் கோவிந்தம்மாள் அவர் ராமசாமி கவுண்டர் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு சுமார் 26 ஆண்டுகள் எனது தாயார் உயிரோடு இருந்தார் என்றால் ஆமாம். ராமசாமி கவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு என் தாயாரின் சகோதரி பெரியம்மாள் சுமார் 20 ஆண்டுகள் உயிரோடு இருந்திருப்பார் என்றால் ஆமாம். இந்த வழக்கு என் தாயாரால் தாக்கல் செய்யப்பட்டபோது அவருக்கு சுமார் 96 வயது இருக்கும் என்றால் சரிதான். என் தாயார் 2017 ஆம் ஆண்டு இறந்தார் என்றால் ஆமாம். என்னையும் 2ம் வாதியையும் தவிர என் தாயார் வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்றால் ஆமாம்.

4. என் தாயார் காலமாவதற்கு சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வீட்டில் ஒய்வில் தான் இருந்து வந்தார் என்றால் ஆமாம். என் தாயாரின் சகோதரியின் மகனான 8ம் பிரதிவாதி இந்த வழக்கில் எதிர்வாதம் எதுவும் தாக்கல் செய்து தனக்கு பாகம் வேண்டும் என கேட்கவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்துக்களுக்கு

அருகிலேயே எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களும் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு எங்கள் தகப்பனார் வழியில் பாத்தியப்பட்டு வந்த சொத்துக்கள் என்றால் ஆமாம். என் தாயார் வயதான காலத்தில் எனது மற்றும் எனது சகோதரரின் பராமரிப்பில் இருந்து வந்து எங்களை சார்ந்து இருந்து வந்து தான் காலமானார் என்றால் ஆமாம். என் தாயார் 80 வயதிற்கு பின்னிட்டு தானாக உழைத்து தன்னை பராமரித்துக் கொள்ள முடியாத நிலையில் என்னையும், என் சகோதரரையும் சார்ந்துதான் நடமாட்டத்துடன் இருந்து வந்தார் என்றால் சரிதான்.

5. என் தாயார் காலமாகும் வரை அவரது சொத்துக்களை பொறுத்து உரிமை மாற்ற ஆவணம் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் எனது சகோதரருக்கு சொத்துக்களை பராமரிக்க பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அந்த ஆவணத்தை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். என் தாயார் எந்த ஆண்டில் எனது சகோதரருக்கு பொது அதிகார ஆவணத்தை எழுதிக் கொடுத்தார் என்றால் வருடம் எனக்கு ஞாபகம் இல்லை இந்த வழக்கிற்கு முன்பு என் தாயார் ராமாத்தாளோ அவரது சகோதரி பெரியாத்தாளோ அவரது சகோதரர்களுக்கு எதிராக இந்த வழக்கைத் தவிர வேறு வழக்கோ தாவா சொத்தில் பாகம் கேட்டு அறிவிப்போ அனுப்பவில்லை என்றால் ஆமாம்.

6. வழக்குரை சொத்து விபரத்தில் என் தாயாரின் தகப்பனார் ராமசாமி கவுண்டர் என்பவரால் விட்டு செல்லப்பட்ட நிலையிலேயே சொத்து விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து

விபரத்தில் வீடு, கிணறு, பாசன அமைப்பு உள்ளிட்ட விவரங்கள் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ராமசாமி கவுண்டர் காலத்தில் எவ்வாறு இருந்ததோ அவ்வாறு தான் வழக்குரை சொத்து விபரத்தில் சொல்லி உள்ளோம் என்றும், அதற்கு பின்னிட்டு தாவா சொத்தில் பிரதிவாதிகளால் செய்யப்பட்ட மேம்பாடுகள் குறித்து நாங்கள் வழக்குரை சொத்து விபரத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். ராமசாமி கவுண்டர் விட்டுச் சென்ற சொத்துக்களில் நாங்கள் பாகம் கேட்கிறோம் என்றால் சரிதான்.

7. 4ம் பிரதிவாதி வேலுச்சாமி மற்றும் 7ம் பிரதிவாதி பழனிச்சாமி ஆகியோர்களின் தகப்பனார்களான குமாரசாமி கவுண்டர் மற்றும் நாச்சப்ப கவுண்டர் ஆகியோர் தாவா சொத்துக்களை பொறுத்து வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் பாகம் செய்து கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்குரை சொத்து விபரத்தில் சேமலை கவுண்டன்வலசில் உள்ள வீடு மற்றும் வழக்கு சொத்திற்குள் 4 மற்றும் 7 பிரதிவாதிகளால் கட்டப்பட்டுள்ள வீடுகள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 4ம் பிரதிவாதி வேலுச்சாமி என்பவர் அவருக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் பாகம் பிரிந்த சொத்தில் கிணறு வெட்டி மின் இணைப்பு வாங்கி உள்ளார் என்றால் அதை நான் போய் பார்க்கவில்லை. வேலுச்சாமி அவரது பங்கில் அரசு பண்ணை குட்டை ஒன்றை அமைத்துள்ளார் என்றால் ஆமாம்.

8. 7ம் பிரதிவாதி அவர் ஓட்டி வரும் பங்கில் ஆழ்துளை கிணறு ஒன்று அமைத்துள்ளார் என்றால் அதை நான் போய் பார்க்கவில்லை. ரீ.ச.எண்.181/2ல் வேலுச்சாமி வீடு கட்டி தொண்டு பட்டி அமைத்து

ஆட்டு குடோன் வைத்துள்ளார் என்றால் சரிதான். பழனிச்சாமியும் ரீ.ச.எண்.181/2 ல் வீடு கட்டி தொண்டு பட்டி அமைத்துள்ளார் என்றால் நான் அதை சென்று பார்க்கவில்லை. ரீ.ச.எண். 258/பி பூமியில் 4 ம் பிரதிவாதி வேலுச்சாமி போர்வெல் அமைப்பு வியாபார ரீதியான மின் இணைப்பைப் பெற்று நீண்ட காலமாக பயன்படுத்தி வருகிறார் என்றால் ஆமாம். மேட்டுப்பாளையம் கிராமத்தில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் தோட்ட பூமிகள் என்றால் ஆமாம்.

9. கிணற்று பாசனமும் உள்ளது என்றால் ஆமாம். அதில் தென்னை மரங்களும் முருங்கை மரங்களும் வேலுச்சாமியும், பழனிச்சாமியும் வைத்துள்ளார்கள் என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்யும் வரையில் வேலுச்சாமியும், பழனிச்சாமியும் தாவா சொத்துக்களில் செய்த மேம்பாடுகளை பொறுத்து நாங்கள் ஆட்சேபித்து காவல் நிலையத்தில் அவர்கள் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். எங்களுக்கும், வேலுச்சாமி மற்றும் பழனிச்சாமி ஆகியோர்களுக்கும் இடையே தட பிரச்சனை சம்பந்தமாக மனவிரோதம் ஏற்பட்டு ஒரு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த மனவிரோதத்தின் காரணமாகத்தான் இந்த வழக்கு ஏற்பட்டுள்ளது என்றால் அந்த வழக்கை எனது தாயார் தான் தாக்கல் செய்தார் நான் தாக்கல் செய்யவில்லை.

10. என் தாயார் என் தாயாரின் தகப்பனார் இருந்த காலத்திலேயே 1975 ஆம் வருடத்தில் தனக்கு தாவா சொத்துக்களை பொறுத்து இருந்து வந்த சொத்துரிமை முழுவதையும் தனது தகப்பனாருக்கும் தனது சகோதரர்களான 4 மற்றும் 7 பிரதிவாதிகளுக்கும் விட்டுக் கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. 1975 ம் ஆண்டிலிருந்து தாவா

சொத்துக்களை 4 மற்றும் 7 பிரதிவாதிகள் தனிப்பட்ட முறையில் பாத்தியமடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1978 ஆம் ஆண்டு 4ம் பிரதிவாதி தகப்பனார் குமாரசாமி கவுண்டர் தாவா சொத்தில் தனக்கு பாத்தியப்பட்டிருந்த சரிபாதி பங்கை பொறுத்து ஒரு பழனிசாமி கவுண்டர் என்பவருக்கு அடமானம் வைத்து அதை 1980 ஆம் ஆண்டு தீர்த்து ரசீது பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. அந்த அடமான கடனை எனது தகப்பனார் தான் முன் நின்று பெற்றுக் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தப்பட்ட வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் எங்கள் பெயரிலோ என் தாயார் பெயரிலோ இல்லை என்றால் ஆமாம். தாவா சொத்தை பொருத்த பட்டா சிட்டா உள்ளிட்ட ஆவணங்கள் அனைத்தும் குமாரசாமி கவுண்டர் மற்றும் நாச்சப்ப கவுண்டர் பெயரில் தான் உள்ளது என்றும் மேற்படி ஆவணங்களில் எங்கள் பெயரையும் சேர்க்க நாளது தேதி வரை நாங்கள் என்ன முயற்சியும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எங்கள் பெயரில் நாங்கள் இதுவரை வரி செலுத்தியதை காண்பிக்க கூடிய ஆவணங்கள் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நில உடமை பதிவு மேம்பாட்டு திட்டம் காலம் முதல் தாவா சொத்தை நாச்சப்ப கவுண்டர் ஆகியோர்கள் பெயரில் ஏற்பட்டு தாவா சொத்துக்களுக்கான வரி வகைகளை மேற்படியார்கள் தான் செலுத்தி வந்தார்கள் என்றால் ஆமாம்.

12. மேற்படி நாச்சப்ப கவுண்டர் மற்றும் குமாரசாமி கவுண்டர் ஆகியவர்கள் இறப்பிற்கு பின்னிட்டு 4 மற்றும் 7 பிரதிவாதிகள்

பெயருக்கு தாவா சொத்தை பொறுத்து வருவாய்த்துறை ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டு மேற்படியார்கள் தான் தாவா சொத்திற்கான வரி வகைகளை செலுத்தி வருகிறார்கள் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான்.

13. அதில் இரண்டாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ள குமாரசாமி என்பவர் யார் என்றால் அவர் எங்கள் பக்கத்து தோட்டத்துக்காரர். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை நானும் மற்றொரு சாட்சி கையப்பம் செய்துள்ள நபரும் தான் முன்னின்று ஏற்படுத்தி கொடுத்தோம் என்று சொன்னால் சாட்சி போட சொன்னார்கள் அதனால் சாட்சி கையப்பம் போட்டேன். ஆவணத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து அடையாளம் காட்டும் சாட்சியாக சாட்சி கையப்பம் செய்துள்ளேன் என்றால் சாட்சி போட சொன்னதால் சாட்சி கையப்பம் செய்தேன் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் தாவா சொத்துக்களை அளவீடு செய்து நான்கு மற்றும் ஏழு பிரதிவாதிகள் பாகம் செய்து கொண்டார்கள் என்றும் அதை உடனிருந்து நானும் அதில் சாட்சி கையப்பம் செய்துள்ள குமாரசாமியும் தான் முன் நின்று செய்து கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல.

14. மேற்படி விவரங்களை தற்போது ஒப்புக்கொண்டால் அது எங்கள் வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்ற காரணத்திற்காக நான் அந்த சங்கதிகளை தற்போது மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல தடப் பிரச்சனை வழக்கு ஏற்படும் வரை நானும், 4, 7 பிரதிவாதிகளும் நேசமாகத்தான் இருந்தோம் என்றால் ஆமாம். 30

ஆண்டுகளுக்கு மேலாக 4, 7 பிரதிவாதிகள் வகையறா தனிப்பட்ட உரிமையாளர்களாக தாவா சொத்துக்களை எனது தாயாரும் அவரது சகோதரி பெரியமாளும் இல்லாமல் அனுபவம் செய்து வந்துள்ளார்கள் என்றும் அதனால் என் தாயாரும் சகோதரிகளும் கேட்காத உரிமையை தாவா சொத்துக்களை பொறுத்து நாங்கள் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் நல்ல சுய நினைவில் திடகாத்திரமாக இருந்தபோது தாவா சொத்துக்களில் அவர் பங்கு எதுவும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

15. என் தாயார் சுமார் 95 வயதில் படுத்த படுக்கையாக என்னையும் 2ம் வாதியையும் சார்ந்து இருந்த சமயத்தில் அவருக்கே தெரியாமல் அவரை வைத்து இந்த வழக்கு எங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் என் தாயாரால் எந்த வழக்கு முன் அறிவிப்பும் கொடுக்கப்படாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக எங்களால் சொல்லப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

16. குமாரசாமி கவுண்டரும் நாச்சப்ப கவுண்டரும் தனிப்பட்ட முறையில் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வந்ததை பொறுத்துதான் 4, 7 பிரதிவாதிகளின் தகப்பனார்கள் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் 2012 ஆம் ஆண்டு 4ம் பிரதிவாதியின் தகப்பனார் அவர் பாகத்தை பொறுத்து 4ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் அந்த விபரங்கள் எனக்கு தெரியாது மேற்படி ஆவணங்களை தொடர்ந்து 13.05.2015 தேதியில் 4ம் பிரதிவாதி அவரது

சகோதரியிடமிருந்து அவரது பாகத்தை பொறுத்து பாகபாத்திய விடுதலை ஆவணம் எழுதி பெற்றுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. நாச்சப்ப கவுண்டரின் வாரிசான 7ம் பிரதிவாதியும் அவரது தகப்பனாருக்கு பின்னிட்டு அவரது வாரிசுகளுக்குள் ஏற்படுத்திக் கொண்ட ஏற்பாட்டின் அடிப்படையில் நாச்சப்ப கவுண்டரின் பாகத்தை தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

17. என் தாயாருக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் அந்த விபரங்கள் எனக்கு தெரியாது. நான் வழக்கு சொத்திற்கு அருகாமையிலேயே வசித்துக் கொண்டு வழக்கு சொத்துக்களின் தனிப்பட்ட அனுபவம் மற்றும் மேம்பாடுகளை பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு பின்னிட்டு காலம் கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகளை குறிப்பிட்டால் வழக்கு சொத்தின் மதிப்பு அதிகமாகிவிடும் என்பதால் அதை மறைத்து வழக்கு சொத்தை உண்மை விவரங்களை காட்டாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்களை பொறுத்து ராமாத்தாளுக்கு இருந்து வந்த உரிமைகள் முற்றுப்பெற்று விட்டதால் வழக்குச் சொத்தில் எந்தவித உரிமையும் எங்களுக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

18. தாவா சொத்துக்கள் கூட்டு சுவாதீனத்தில் உள்ளது என்பதை காட்ட நாங்கள் எந்த விதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு நாங்கள் செலுத்தியுள்ள

நீதிமன்ற கட்டணம் தவறானது என்றும் தாவா உரிய முறையில் மதிப்பீடு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனவே நாங்கள் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடியாக தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.26 19:08:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்